(2022) 7 எஸ்.சி.ஆர். 241

ராஜு என்கிற ராஜேந்திர பிரசாத்
–எதிர்–
ராஜஸ்தான் மாநில அரசு
(குற்றவியல் மேல்முறையீடு எண் 1559/2022)
செப்டம்பர் 19, 2022
(மாண்புமிகு நீதியரசர் திரு. எம்.ஆர். ஷா
மற்றும்
மாண்புமிகு நீதியரசர் திரு. கிருஷ்ணமுராரி)

தண்டனைச் சட்டம் – பிரிவுகள் 302, 34 – கொலை – சூழ்நிலைச் சான்று – முதல் தகவல் அறிக்கைப்படி மேல்முறையீட்டாளர்–குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு (இறந்தவரின் மனைவி மற்றும் உடன் குற்றஞ்சாட்டப்பட்டவர்) தவறான உறவு இருந்தது – பிரச்சினை காரணமாக குற்றஞ்சாட்டப்பட்டவர் அவரது பெற்றோர் வீட்டில் வசிக்க ஆரம்பித்துள்ளார் – தனது மனைவியையும் குழந்தைகளையும் அழைத்துவர இறந்தவர் தனது மாமியார் வீட்டுக்கு சென்றிருந்தார், இருப்பினும் மறுநாள் அவரது உடல் ஒரு மரத்தில் தொங்கிக்கொண்டிருந்தது – மேல்முறையீட்டாளர், பிரிவு 302 உடன் இணைந்த பிரிவு 34–இன் கீழ் தண்டிக்கப்பட்டார் – மேல்முறையீட்டில் முடிவு, அரசுத் தரப்பு வழக்கு சூழ்நிலைச் சான்றை அடிப்படையாகக்கொண்டது – இறந்தவரை மேல்முறையீட்டாளர் கொன்றார் அல்லது கொலை செய்துள்ளார் என்பதற்கு எந்த நேரடி சாட்சியும் இல்லை – சூழ்நிலை சாட்சியத்தை கொண்ட வழக்கில், சூழ்நிலைகள் மொத்தமாக ஒரு சங்கிலித் தொடரை உருவாக்கவேண்டும் என்றும், குற்றம் எதிரியால்தான்

புரியப்பட்டதென்றும் வேறு ஒருவராலும் அல்ல என்ற அனுமானத்திற்கு உட்பட்டு அந்த தீர்முடிவிலிருந்து தப்பிப்பதற்கு எந்த வாய்ப்பும் இருக்கக்கூடாது – தண்டனையை நிலைநிறுத்துவதற்கான சூழ்நிலை சாட்சியம் முழுமையாக இருத்தல்வேண்டும், மேலும் குற்றஞ்சாட்டப்பட்ட எதிரியின் குற்றத்தை தவிர வேறு எந்த யூகத்தையும் விளக்குவதற்கு இயலாததாக இருக்கவேண்டும் – அத்தகைய சான்று குற்றஞ்சாட்டப்பட்டவரின் குற்றத்துடன் ஒத்துப்போவதாகவும் அவரது குற்றமின்மையுடன் ஒத்துப்போகாததாகவும் இருத்தல்வேண்டும் – குற்றஞ்சாட்டப்பட்டவர் இறந்தவருடன் கடைசியாக ஒன்றாக காணப்பட்டவில்லை என்பதற்கான சான்று ஏதும் இல்லை – மேல்முறையீட்டாளர் மட்டுமே கொலை செய்தார் மற்றும்/அல்லது இறந்தவரைக் கொன்றார் என்ற ஒரே முடிவுக்கு வரக்கூடிய முழுமையான சங்கிலித் தொடர் நிகழ்வுகளையும், குற்றத்தையும் அரசுத் தரப்பு நிரூபிக்கத்தவறிவிட்டது – விசாரணை நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றம் ஆகியவற்றால் வழங்கப்பட்ட குற்றத் தண்டனை நீக்கறவு செய்யப்படுகிறது – குற்றஞ்சாட்டப்பட்டவர் விடுவிக்கப்பட்டார் – சாட்சியம்.

மேல்முறையீடுகளை அனுமதித்த இந்நீதிமன்றம் தீர்மானித்ததாவது :

வழக்கு சூழ்நிலைச் சான்றின் அடிப்படையில் இருப்பது குறிக்கப்படவேண்டியதாகிறது. மேல்முறையீட்டாளர் இறந்தவரைக் கொன்றார் அல்லது கொலையைச் செய்தார் என்று சொல்வதற்கான நேரடி சாட்சியம் இல்லை. குற்றத்தில் மேல்முறையீட்டார் ஈடுபட்டுள்ளார்

என்பதைக் காட்டும் நேரடி சாட்சியம் இல்லை, அரசுதரப்பு வழக்கு சூழ்நிலை சான்றை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இந்நீதிமன்றத்தின் தொடர் தீர்முடிவில் தீர்மானித்துள்ளதைபோன்று, சூழ்நிலை சாட்சியத்தின் வழக்கை பொருத்தவரையில், சூழ்நிலைகளை ஒட்டுமொத்தமாக கருதிற்கொண்டால், அனைத்து மனித சாத்தியக்கூறுக்குட்பட்டு எதிரியைத் தவிர வேறு எவராலும் குற்றம் புரியப்படவில்லை என்ற முடிவிலிருந்து தப்பிக்க முடியாத அளவில் முழுமையான சங்கலித் தொடர் சூழ்நிலையை உருவாக்க வேண்டும். குற்றத்தை நிலைநிறுத்துவதற்கான சூழ்நிலை சான்று முழுமையாகவும், குற்றஞ்சாட்டப்பட்டவரின் குற்றத்தை தவிர மற்ற யூகங்களையும் விளக்க இயலாததாகவும் இருத்தல் வேண்டும். மேலும் அத்தகைய சான்று குற்றங்சாட்டப்பட்டவரின் குற்றத்தை உறுதிப்படுத்துவது மட்டுமல்லாமல், அது அவரை குற்றமற்றவர் என்பதையும் உறுதிப்படுத்த வேண்டும். முக்கிய சாட்சியான மற்றும் அவரது சாட்சியத்தை வைத்து மேல்முறையிட்டாளர்கள் – குற்றம் சாட்டப்பட்டவர் இ.த.ச. பிரிவு 302/34–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளாரா என அ.ச.6 – சான்றுரையைக் கருத்தில் கொண்டால் குற்றம் சாட்டப்பட்டவர் இறந்தவருடன் கடைசியாக காணப்பட்டார் என அரசுத்தரப்பு நிரூபித்துள்ளது எனக்கூற முடியாது. சில சண்டைக்குப் பிறகு, பாட்டி இறந்து போனவரைத் தூங்குவதற்காக அறைக்கு அழைத்துச்சென்றார் என அ.சா.6 தனது முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ளார். அதன்பின்னர் அவளும்கூட தூங்கப்போய்விட்டார் மற்றும் அவள் காலையில் எழுந்தவுடன், அவளது பாப்பா மரத்தில்

தொங்கிக்கொண்டிருந்ததை அவள் கண்டாள். குறுக்கு விசாரணையில், அவளது தந்தையை எவரும் அடித்து அவள் பார்க்கவில்லை என அவள் குறிப்பிட்டுக் கூறினாள். எனவே குற்றம் சாட்டப்பட்டவர் இறந்தவருடன் கடைசியாகக் காணப்பட்டார் என்பதற்கான எந்த சான்றும் இல்லை. இறந்தவர் படுக்க அறைக்கு சென்றபிறகு என்ன நடந்தது என்பதற்கு எந்த சாட்சியமும் இல்லை. இந்தச் சூழ்நிலையில், மேல்முறையிட்டாளர் குற்றம் சாட்டப்பட்டவர் மட்டுமே கொலை செய்தார் மற்றும்/அல்லது இறந்தவரைக் கொன்றார் என்ற முடிவுக்கு வழிவகுக்கும். குற்றம் மற்றும் நிகழ்வுகளின் முழுமையான சங்கிலித் தொடர் குறித்து அரசுதரப்பு நிரூபிக்கத்தவறி விட்டது. இந்த சூழ்நிலைகளின் கீழ் மற்றும் சூழ்நிலைச்சான்று குறித்து மேற்சொன்ன முடிவுகளில் கூறப்பட்ட சட்டங்களைப் பொருத்திப் பார்த்தால், அத்தகைய சூழ்நிலைச் சான்றின் அடிப்படையில் இ.த.சா. பிரிவு 302/34–ன் கீழுள்ள குற்றத்திற்காக மேல்முறையிட்டாளர் – குற்றம் சாட்டப்பட்டவருக்கு குற்றத்தண்டணை வழங்கி விசாரணை நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றமும் மிகப் பெரும் பிழைப் புரிந்துள்ளது என நாங்கள் கருதுகிறோம். இ.த.ச. பிரிவு 302/34–ன் கீழ் உள்ள குற்றத்திற்கு மேல்முறையீட்டாளர் குற்றம்சாட்டப்பட்டவரின் தண்டனைத் தீர்ப்பு நிலைநிறுத்தத்தக்கதல்ல. மேலே சொன்னவாறு மற்றும் மேலே கூறிய காரணங்களால் இரு மேல்முறையீடுகளும் வெற்றியடைகிறது. இ.த.ச. பிரிவு 302/34–ன் கீழ் தண்டிக்கப்படக்கூடிய குற்றத்திற்காக மேல்முறையீட்டாளர் – அசல் குற்றம் சாட்டப்பட்டவருக்கு குற்றத்தண்டனை வழங்கி விசாரணை நீதிமன்றம் அதேபோல் உயர்நீதிமன்றம் வெளியிட்ட தீர்ப்புரை மற்றும்

ஆணை செல்லாததாகவும் மற்றும் நீக்கரவும் செய்யப்படுகிறது மற்றும் அவர்கள் எந்தக் குற்றத்திற்காக தண்டிக்கப்பட்டார்களோ அதிலிருந்து குற்றம் சாட்டப்பட்டவர்கள் விடுவிக்கப்படுகிறார்கள்.

பாபு –எதிர்– கெரளா மாநில அரசு (2010) 9 எஸ்.சி.சி. 189 ; (2010) 9 எஸ்.சி.ஆர். 1039 ; ஜி. பார்ஷ்வநாத் எதிராக கர்நாடகா மாநிலம், (2010) 8 எஸ்சிஆர் 593 : [2010] 10 எஸ்சிஆர் 377– சார்வுறப்பட்டது.

முகமது யூனுஸ் அலி தரஃப்தார் எதிராக மேற்கு வங்க மாநிலம், (2020) 3 எஸ்சிஆர் 747 : 2020 (2) ஜெடி 456; அன்வர் அலி மற்றும் ஒருவர் –எதிர்– ஹிமாச்சல பிரதேச மாநிலம், (2020) 10 எஸ்சிசி 166: [2020] 9 எஸ்சிஆர் 878– சார்வுறப்பட்டது.

<u>பார்வையிடப்பட்ட தீர்முடிவுகள்</u>:

(2020)3 எஸ்சிசி 747 ...பத்தி 4.3

(2020)9 எஸ்சிஆர் 878 . ..பத்தி 4.3

(2010)9 எஸ்சிஆர் 1039 ...பத்தி 7.2

(2010)10 எஸ்சிஆர் 377 ...பத்தி 7.3

குற்றவியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு: குற்றவியல் மேல்முறையீடு எண் 1559/2022.

ஜெய்ப்பூரிலுள்ள ராஜஸ்தான் உயர் நீதிமன்றத்தின் நீதியராயத்தால் குற்றவியல் மேல்முறையீடு (டி.பி) எண் 106/2018–இல், 11.7.2019 தேதியிடப்பட்ட தீர்ப்புரை மற்றம் உத்தரவிலிருந்து எழுகிறது.

உடன்

குற்றவியல் மேல்முறையீடு எண் 1560/2022

வழக்குரைஞர்கள்:

செல்வி சங்கீதா குமார், செல்வி சித்ரங்தா ராஸ்ட்ராவரா, மன்வேந்திர சிங், தஷ்ரத் சிங், அபிஜீத் சிங், திருமதி குஞ்சன் நேகி, ஷிவ் அவுதர்சிங் செங்கர், ஆதித்ய பிரதாப் சிங் சவுகான், ஐஸ்வர்யா மிஸ்ரா, ஜிபி.கேப்டன். கரண் சிங் பதி, ...மேல்முறையீட்டாளருக்காக

செல்வி குர்கிரத் கவுர், செல்வி ஆசியா, மிலிந்த் குமார் ...எதிர்மேல்முறையீட்டாளருக்காக

<u>தீர்ப்புரை</u>

மாண்புமிகு நீதியரசர் திரு. எம்.ஆர். ஷா :

1. இ.த.ச., பிரிவு 302–இன் கீழான குற்றத்திற்காக தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டதை எதிர்த்து இங்குள்ள மேல்முறையீட்டாளர்கள்– அசல் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் ஜெய்ப்பூரிலுள்ள ராஜஸ்தான் உயர் நீதிமன்ற நீதியராயத்தின் டி.பி. குற்றவியல் மேல்முறையீடு எண்கள் 106/2018 மற்றும் 107/2018 ஆகியவற்றை தாக்கல் செய்து, அதை உயர் நீதிமன்றம் தனது எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை மற்றும் உத்தரவு மூலம் தள்ளுபடி செய்ததில் பாதிப்படைந்து, அதிருப்தியுற்ற குற்றஞ்சாட்டப்பட்டவரான ராஜு என்கிற ராஜேந்திர பிரசாத் மற்றும் திருமதி சுமன் தேவி ஆகியோர் தற்போதைய மேல்முறையீடுகளைத் தாக்கல் செய்தனர்.

2. தனது சகோதரர் நரேந்திரா என்கிற கோலியாவை கொன்றதற்காக குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கெதிராக அசல் புகார்தாரரான பிரகாஷ்–இறந்தவரின் சகோதரர் புகார் / மு.த.அ.–ஐ

தாக்கல் செய்தார். அவரது சகோதரர் நரேந்திரா, தனது மைத்துனியான சுமன் தேவியை திருமணம் புரிந்தார் என்பது புகார்–மு.த.அ.–இல் குறிப்பிடப்பட்டிருந்தது. அவரது சகோதரர் மற்றும் அவரது மனைவியிடையே சில கருத்தவேறுபாடு இருந்தத. குற்றஞ்சாட்டப்பட்ட சுமன் தேவி, உடன் குற்றஞ்சாட்டப்பட்டவரான ராஜு என்கிற ராஜேந்திர பிரசாத்துடன் கள்ளத் தொடர்பு வைத்திருந்ததாகக் கூறப்படுகிறது. அந்தப் பிரச்சினை மற்றும் கருத்துவேறுபாட்டால் குற்றஞ்சாட்டப்பட்ட சுமன் தேவி அவளது பெற்றோர் வீட்டில் வசிக்கத் தொடங்கினார். 26.09.2016 அன்று அவரது சகோதரர்–இறந்தவர் அவரது குழந்தைகளையும், மனைவியையும் அழைத்துவர அவரது மாமனார் வீட்டிற்குச் சென்றுள்ளார். இருப்பினும், அவரது சகோதரர் தற்கொலை செய்துகொண்டதாகவும், அவரது உடல் ஒரு மரத்தில் தொங்கிக்கொண்டிருந்நதாகவும் மறுநாள் காலை அவருக்குத் தெரியவந்தது. சுமன் தேவி, மாமனார் மோதிராம், மாமியார் லக்பதிதேவி, மைத்துனர் விக்ரம் மற்றும் ராஜு என்கிற ராஜேந்திர பிரசாத் ஆகியோர் கூட்டுச்சதி செய்து அவரது சகோதரரைக் கொன்றுவிட்டதாகப் கூறினார். அதன் பின்னர், புலனாய்வு முடிவடைந்ததன்பேரில், இங்குள்ள மேல்முறையீட்டாளர்களுக்கெதிராக குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. இ.த.ச., பிரிவு 302–இன் கீழ் அல்லது மாற்றாக இ.த.ச., பிரிவு 302/34–இன் கீழான குற்றத்திற்காக மேல்முறையீட்டாளர்கள்–குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கெதிராக குற்றச்சாட்டு வணையப்பட்டது. மேல்முறையீட்டாளர்கள் –

குற்றஞ்சாட்டப்பட்டவர் குற்றத்தை ஒப்புக்கொள்ளாததால், மேற்சொன்ன குற்றத்திற்காக கற்றறிந்த விசாரணை நீதிமன்றம் வழக்கை விசாரித்தது.

2.1. குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கெதிராக குற்றச்சாட்டை வெளிக்கொணர, அரசுத் தரப்பு அ.சா. 6 இறந்தவரின் மற்றும் குற்றஞ்சாட்டப்பட்ட சுமன் தேவியின் மகளான ஷி வானி, அ.சா. 7, சுமன் தேவியின் சகோதரியான சுனிதா உட்பட 15 சாட்சிகளை விசாரித்தது. அரசுத் தரப்புச் சாட்சியங்கள் முடிந்தபின்னர் கு.ந. சட்டம் பிரிவு 31–இன் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டவரின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. சாட்சியங்களைக் கருத்திற்கொண்டு, இறந்துபோனவர் மற்றும் இற்றஞ்சாட்டப்பட்ட சுமன்தேவியின் மகளான அ.சா.6 ஷிவானி மற்றும் சுமன் தேவியின் சகோதரியின் அ.சா.7, சுனிதா ஆகியோரின் வாக்குமூலங்களைச் சார்ந்து, கற்றறிந்த விசாரணை நீதிமன்றம் 22.01.2018 தேதியிடப்பட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவு மூலம் இ.த.ச. பிரிவு 302 உடன் இணைந்த பிரிவு 34–இன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றத்திற்காக மேல்முறையீட்டாளர்களுக்கு ஆயுள் தண்டனை வழங்கியதுடன் ரூ. 20,000–க்கான அபராதமும் விதித்தது.

2.2. கற்றறிந்த விசாரணை நீதிமன்றம் பிறப்பித்த குற்ற மற்றம் தண்டனைத் தீர்ப்பால் பாதிக்கப்பட்டு, அதிருப்தியடைந்த குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் உயர் நீதிமன்றம் முன்பு மேல்முறையீடு செய்தனர். உயர் நீதிமன்றம் தனது எதிர்ப்புக்குள்ளான பொதுத் தீர்ப்புரை மற்றும் உத்தரவு மூலம் மேற்சொன்ன மேல்முறையீடுகளை தள்ளுபடி செய்து, இ.த.ச., பிரிவு 302 உடன் இணைந்த பிரிவு 34–இன் கீழான தண்டிக்கத்தக்க குற்றத்திற்காக குற்றஞ்சாட்டப்பட்டவரை குற்றவாளி

என தீர்மானித்து கற்றறிந்த விசாரணை நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட குற்றத் தீர்ப்பு மற்றும் உத்தரவை உறுதி செய்தது.

2.3 மேல்முறையீடுகளை தள்ளுபடி செய்து தண்டனை தீர்ப்பை உறுதி செய்த உயர் நீதிமன்றத்தின் எதிர்ப்புக்குள்ளான தீர்ப்பு மற்றும் உத்தரவால் பாதிப்படைந்து, அதிருப்தியுற்ற அசல் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தற்போதுள்ள மேல்முறையீடுகளைத் தாக்கல் செய்தனர்.

3. சம்பந்தப்பட்ட மேல்முறையீட்டாளர்கள் சார்பாக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர்கள் செல்வி சங்கீதா குமார் மற்றும் செல்வி சித்ராங்கத ராஷ்ரவராவும் ராஜஸ்தான் அரசு சார்பில் கற்றறிந்த வழக்குரைஞர் செல்வி குர்கிரட் கௌர் ஆகியோர் ஆஜராயினர்.

4. வழக்கின் பொருண்மைகள் மற்றும் சூழ்நிலைகளில் இருந்து, மேல்முறையீட்டாளர்கள் இ.த.ச., பிரிவு 302/34 கீழான குற்றத்திற்காக குற்றவாளிகள் எனத் தீர்மானித்ததில் கற்றறிந்த விசாரணை நீதிமன்றமும், உயர் நீதிமன்றமும் கடும் பிழை புரிந்துள்ளனர் என்று முறையே எதிர் மேல்முறையீட்டாளர்கள்–குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் சார்பாக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் முனைப்புடன் வாதிட்டார்.

4.1. வழக்கு சூழ்நிலை சான்றினையே சார்ந்துள்ளது என மேல்முறையீட்டாளர்கள் அசல் குற்றஞ்சாட்டப்பட்டவர் சார்பாக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞரால் கடுமையாக சமர்ப்பிக்கப்பட்டது. நேரடி சாட்சியம் ஏதும் இல்லை.

மேல்முறையீட்டாளர்கள் இறந்தவரைக் கொன்றனர் மற்றும் / அல்லது கொலை புரிந்தனர் என்று கூறுவதற்கு மேல்முறையீட்டாளர்களுக்கு எதிராக எள்ளளவு சாட்சியமும் இல்லை என சமர்ப்பிக்கப்பட்டது.

4.2. இறந்து போனவர் மற்றும் குற்றஞ்சாட்டப்பட்ட சுமன் தேவியின் மகளான முக்கிய சாட்சியான அ.சா. 6 ஷிவானி தனது வாக்குமூலத்தில், அவளது தந்தையை, மேல்முறையீட்டாளர் கொன்றதைதான் பார்க்கவில்லை என திட்டவட்டமாக சான்றுரைத்ததை மேல்முறையீட்டாளர்கள்–அசல் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் சார்பாக முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் கடுமையாகச் சமர்ப்பித்தார். அ.சா.6–இன் வாக்குமூலத்திலிருந்துகூட இங்கு மேல்முறையீட்டாளர்கள்–அசல் குற்றஞ்சாட்டப்பட்டவர் இறந்தவருடன் கடைசியாக காணப்பட்டனர் என்பதனை நிறுவ மற்றும் நிரூபிக்கவில்லை என சமர்ப்பிக்கப்பட்டது. நகிழ்வுகளின் முழுமையான சங்சிலித் தொடரை நிறுவ மற்றும் நிரூபிக்க அரசுத் தரப்பு தவறிவிட்டது என சமர்ப்பிக்கப்பட்டது. எனவே, இ.த.ச. பிரிவு 302/34–ன் கீழ் மேல்முறையிட்டாளர்கள் – குற்றம் சாட்டப்பட்டவர் குற்றத்தண்டனை நிலை நிறுத்தத்தக்கதல்ல என சமர்ப்பிக்கப்பட்டது.

4.3. குற்றம்சாட்டப்பட்டவரின் குற்றத்தை நிரூபிக்க அரசுதரப்பு சார்ந்துள்ள சூழ்நிலைகள் முழுதாக இல்லை என்றும், எல்லா மனித சாத்தியக் கூறினாலும் மேல்முறையிட்டாளர்கள்–குற்றம் சாட்டப்பட்டவர்களால் கொலை செய்யப்பட்டுள்ளது என்ற முடிவுக்கு மேற்படி சூழ்நிலைகள் வழிவகுக்கவில்லை என்றும், அத்தகைய

சூழ்நிலைச் சான்றின் அடிப்படையில் மேல்முறையீட்டாளர்களை தண்டித்திருக்கக்கூடாது என்ற அவரது வாதத்திற்கு ஆதாரவாக மொவாமத் யூனுஸ்தலி தரப்தார் –எதிர்– மேற்கு வங்காள அரசு (2020) 3 எஸ்.சி.சி 747 அதேபோல் அன்வர் அலி மற்றும் ஒருவர் –எதிர் ஹிமாச்சலப்பிரதேச அரசு, (2020) 10 எஸ்.சி.சி 166–ல் கண்ட முடிவுகளை குற்றம்சாட்டப்பட்டவர் சார்பாக முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் கடுமையாக சார்ந்துள்ளார்.

5. மாநில அரசு சார்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் தற்போதைய மேல்முறையீடுகளை கடுமையாக எதிர்த்தார்.

5.1. இந்த வழக்கில் இறந்துபோனவருக்கும் சுமன் தேவிக்கும் பிரச்னையும் கருத்துவேறுபாடும் இருந்துள்ளதை அரசுதரப்பு நிறுவி மற்றும் நிரூவித்துள்ளது என சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. முக்கிய தொடர் சான்றுகள் மூலமும், இறந்துபோனவர் மற்றும் குற்றம் சாட்டப்பட்ட சுமன் தேவியின் மகளை மற்ற சாட்சியங்களை விசாரித்தும், முதல் நாள்/இரவு சண்டை நடந்தது என்றும் மற்றும் குற்றம் சாட்டப்பட்ட ராஜீ மற்றும் சிலர் இறந்தவரை அச்சுறுத்தினர் என்பதை அரசுதரப்பு நிருபித்து நிலை நிறுத்தியுள்ளது என சமர்ப்பிக்கப்பட்டது. எனவே வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளில் இருந்து குற்றம் சாட்டப்பட்டவர் இறந்தவரைக் கொலை செய்துள்ளார் என்ற முடிவுக்கு வழிவகுக்கும் உட்கருத்து மற்றும் சூழ்நிலைகளை அரசுதரப்பு நிறுவியபோது, கற்றறிந்த விசாரணை நீதிமன்றமும், உயர்நீதிமன்றமும், இ.த.ச. பிரிவு 302/34–ன் கீழுள்ள குற்றத்திற்கு குற்றம் சாட்டப்பட்டவருக்கு சரியான தண்டனை வழங்கியுள்ளது என சமர்ப்பிக்கப்பட்டது. மருத்துவ சாட்சியம் –

சடலக்கூறாய்வு/இறந்தவர் கொலை செய்யப்பட்டார் / கொல்லப்பட்டார் என நிரூபிக்கிறது என சமர்ப்பிக்கப்பட்டது.

5.2. மேற்சொன்ன வாதங்களை வைத்து தற்போதைய மேல்முறையீடுகளை தள்ளுபடி செய்ய வேண்டுரைக்கப்படுகிறது.

6. தரப்பினர்களின் சார்பாக கற்றறிந்த வழக்கறிஞர்களின் நீண்ட வாதங்களை கேட்டோம்.

7. கற்றறிந்த விசாரணை நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவு அதேபோல் உயர்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை மற்றும் உத்தரவுகளை நாங்கள் பார்வையிட்டோம். பதிவிலுள்ள சான்று முழுவதையும் நாங்கள் பார்வையிட்டோம்.

7.1. வெளிப்படையாக, வழக்கு சூழ்நிலைச் சான்றின் அடிப்படையில் இருப்பது குறிக்கப்படவேண்டியதாகிறது. மேல்முறையீட்டாளர் இறந்தவரைக் கொன்றார் அல்லது கொலையைச் செய்தார் என்று சொல்வதற்கான நேரடி சாட்சியம் இல்லை. குற்றத்தில் மேல்முறையீட்டார் ஈடுபட்டுள்ளார் என்பதைக் காட்டும் நேரடி சாட்சியம் இல்லை, அரசுதரப்பு வழக்கு சூழ்நிலை சான்றை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இந்நீதிமன்றத்தின் தொடர் தீர்முடிவில் தீர்மானித்துள்ளதைபோன்று, சூழ்நிலை சாட்சியத்தின் வழக்கை பொருத்தவரையில், சூழ்நிலைகளை ஒட்டுமொத்தமாக கருதிற்கொண்டால், அனைத்து மனித சாத்தியக்கூறுக்குட்பட்டு எதிரியைத் தவிர வேறு எவராலும் குற்றம் புரியப்படவில்லை என்ற முடிவிலிருந்து தப்பிக்க முடியாத அளவில் முழுமையான சங்கலித்

தொடர் சூழ்நிலையை உருவாக்க வேண்டும். குற்றத்தை நிலைநிறுத்துவதற்கான சூழ்நிலை சான்று முழுமையாகவும், குற்றஞ்சாட்டப்பட்டவரின் குற்றத்தை தவிர மற்ற யூகங்களையும் விளக்க இயலாததாகவும் இருத்தல் வேண்டும். மேலும் அத்தகைய சான்று குற்றங்சாட்டப்பட்டவரின் குற்றத்தை உறுதிப்படுத்துவது மட்டுமல்லாமல், அது அவரை குற்றமற்றவர் என்பதையும் உறுதிப்படுத்த வேண்டும்.

7.2. பாபு –எதிர்– கேரள மாநிலம் (2010) 9 எஸ்.சி.சி. 189 என்ற வழக்கில், பத்தி 22 முதல் 24 வரை கீழ்க்கண்டவாறு கருதி முடிவு எடுக்கப்பட்டுள்ளது:

"22. கிருஷ்ணன் –எதிர்– மாநிலம் [(2008) 15 எஸ்.சி.சி. 430], என்ற வழக்கில் பல்வேறு முந்தைய தீர்ப்புரைகளை பரிசீலித்த இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு கருத்துரைத்தது. : (எஸ்.சி.சி. பக்கம் 435 பத்தி 15)

"15... சூழ்நிலை சான்றின் மீது வழக்கு இருக்குமானால் அத்தகைய சான்று பின்வரும் சோதனைகளை நிறைவேற்ற வேண்டும் என தொடர்ச்சியாக பல்வேறு தொடர் முடிவுகளை இந்நீதிமன்றம் தந்துள்ளது:

(i) குற்றத்தன்மை முடிவு எடுக்கப்பட காரணமான சூழ்நிலைகள் கோர்வையானதாகவும், உறுதியாக நிறுவியதாகவும் இருத்தல் வேண்டும்.

(ii) குற்றஞ்சாட்டப்பட்டவரின் குற்றத்தை நோக்கி தவறின்றி நிச்சயமான போக்காக அந்த சூழ்நிலை இருத்தல் வேண்டும்.

(iii) சூழ்நிலை சான்றுகளில் அவை பிரண்டு எடுக்கப்பட்டு சங்கிலித் தொடராக முழுமையாக அமையவேண்டும். எல்லா மனிதராலும் செய்யக்கூடிய குற்றம் பிறரால்லன்றி குற்றஞ்சாட்டப்பட்டவரால் செய்யப்பட்டிருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வருவதிலிருந்து எந்த தப்பித்தலும் இல்லாதிருத்தல் வேண்டும்.

(iv) குற்றத்தை நிலைநிறுத்துவதற்கான சூழ்நிலைச் சான்று முழுமையாகவும் குற்றஞ்சாட்டப்பட்டவரின் குற்றத்தை தவிர மற்ற யூகங்களை விலக்க இயலாததாகவும் இருத்தல் வேண்டும், மேலும் அத்தகைய சான்று குற்றஞ்சாட்டப்பட்டவரின் குற்றத்தை உறுதிப்படுத்துவதோடு மட்டும் அல்லாமல் அது அவர் குற்றமற்றவர் என்பதையும் உறுதிப்படுத்த வேண்டும். (பார்க்க: காம்பிக் –எதிர்– மாகராஷ்டிர மாநில அரசு (1982) 2 எஸ்.சி.சி (351).

23. ஷரத் பிர்திசந்த் சர்தா –எதிர்– மகாராஷ்டிர மாநில அரசு [(1194) 4 எஸ்.சி.சி. 116] என்ற வழக்கில், சூழ்நிலைச் சான்று குறித்து விவாதிகையில், அந்த சங்கிலித் தொடர் சம்பவம் முழுமையானது என்றும், அரசுத்தரப்பு வாதத்தின் குறைபாட்டையோ பின்னடைவையோ பொய்யான வாதம் அல்லது வாதுரை மூலம் நிவர்த்தி செய்ய முடியாது என்பதை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு அரசுத்தரப்புக்கு குற்றத்தீர்ப்புக்கு முன்பான முன்நிபந்தனை சூழ்நிலை சாட்சியத்தின் அடிப்படையானது என்றும் அது முழுவதுமாக நிறுவப்பட வேண்டும் என்பதுமாகும்: (எஸ்.சி.சி. பக்கம் 185, பத்தி 153).

i) குற்றத்தன்மை முடிவுக்கு வரக்கூடிய சூழ்நிலைகள் முழுவதும் நிறுவப்படவேண்டும். சம்பந்தப்பட்ட சூழ்நிலை 'கட்டாயமாக' மற்றும் 'கண்டிப்பாக' என்றும் 'இருக்கலாம்' என்பதும் நிறுவப்படவேண்டும்.

ii) அவ்வாறு நிறுவப்பட்ட சங்கதிகள் குற்றஞ்சாட்டப்பட்டவரின் குற்றத்தன்மையை அனுமானத்துடன் மட்டும் ஒத்திருக்க வேண்டும். அதாவது குற்றம் சாட்டப்பட்டவர் குற்றம் செய்தவர் என்பதை தவிர பிற எந்த அனுமானத்துடனும் அவை விளக்கப்படுவதாக இருக்கக் கூடாது.

iii) சூழ்நிலைகள் முடிவான தன்மையுடையதாகவும் இருத்தல் வேண்டும்.

iv) அது நிரூபிக்கும் தன்மையுடையதை தவிர அனைத்து சாத்தியக் கூறுகளையும் நீக்க வேண்டும்.

v) குற்றம் சாட்டப்பட்டவரின் குற்றமின்மையுடன் ஒத்துப்போவதற்கான எந்த நியாயமான காரணத்தையும் விட்டுவிடாமல் சாட்சியத்தின் சங்கிலி தொடர் முழுமையாக இருத்தல் வேண்டும். மற்றும் அனைத்து சாத்தியக் கூறுகளின்பேரிலும் அச்செயல் குற்றம் சாட்டப்பட்டவரால் செய்யப்பட்டது என்பதையும் வெளிப்படுத்த வேண்டும்.

அதேபோன்ற கருத்து, இந்நீதிமன்றத்தின் உ.பி. மாநில அரசு –எதிர்– சதிஷ் (2005) 3 எஸ்.சி.சி. 114 மற்றும் பவான் –எதிர்– உத்தராஞ்சல் மாநில அரசு (2009) 15 எஸ்.சி.சி 259 என்ற வழக்குகளின் தீர்ப்புரைகளில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

24. சுப்ரமணியம் –எதிர்– தமிழ் நாடு அரசு (2009)14 எஸ்சிசி 415 என்ற வழக்கில், வரதட்சணை மரணம் குறித்து பார்க்கையில், ஒன்றாக வாழ்வது உறுதியான சூழ்நிலை என்றாலும், இறந்தவர் மீது எவ்வித வன்முறை இல்லாதபோது அது மட்டுமே முடிவு செய்யக்கூடிய நிருபணமாகாது என்றும், அதற்கு கணவர் மற்றும் கணவர் மட்டுமே பொறுப்பு என்று எடுக்கும் முடிவுக்கு கண்டிப்பாக சில சான்று இருக்க வேண்டும் என்று இந்நீதிமன்றம் கருதியது. அத்தகைய மேல்முறையீட்டாளர் மீதான குற்றத்தண்டனை நிலை நிறுத்த முடியாத தன்மையாக அரசு தரப்பால் தரப்படும் சாட்சியம் இருக்க கூடாது (காண்க : ரமேஷ் பாய் –எதிர்– ராஜஸ்தான் மாநில அரசு (2009) 12 எஸ்.சி.சி. 603.

(வலியுறுத்திக்கூறப்பட்டது)

7.3. ஜி.பர்ஷ்வநாத் –எதிர்– கர்நாடகா அரசு (2010) 8 எஸ்.சி.சி. 593, என்ற வழக்கில் பத்தி 23 மற்றும் 24–ல், கீழ்க்கண்டவாறு முடிவு செய்யப்பட்டுள்ளது:

> "23. சாட்சிய சூழ்நிலைத்தன்மை கொண்ட வழக்கில், குற்றத்தன்மையை முடிவுசெய்யக்கூடிய சூழ்நிலைகளில் முதலில் முழுதும் நிறுவப்பட்டதாக இருக்கும். சார்ந்துள்ள ஒவ்வொரு உண்மையும் தனியாக கட்டாயம் நிரூபிக்க வேண்டும். இருப்பினும் இந்த கோட்பாட்டைப் பொருத்தும்போது முதன்மையான அல்லது அடிப்படையான

சங்கதிகள் ஒருபுறமும் மற்றும் அவற்றிலிருந்து பெறக்கூடிய ஊகம் மற்றொரு புறமும் வைத்து அவற்றிடையே வேறுபாடு கண்டிப்பாக காணப்படவேண்டும். முதன்மையான பொருண்மைகள் நிரூபிப்பது பொறுத்தவரையில் நீதிமன்றம் சாட்சியத்தை மதிப்பீடு செய்து மற்றும் அந்த சாட்சியம் ஒரு குறிப்பிட்ட பொருண்மையை நிரூபிக்கிறதா என முடிவுசெய்து, அந்த பொருண்மை நிரூபிக்கப்பட்டால் அந்த பொருண்மை குற்றம் சாட்டப்பட்ட நபரின் குற்றத்தின் ஊகத்துக்கு அந்த பொருண்மை வழிவகுக்கிறதா என்பது பரிசீலிக்க வேண்டும். இந்த பிரச்சனையின் அம்சம் குறித்து விவாதிக்கையில் சந்தேகத்தின் பயன் என்ற கோட்பாடு பொருந்தும். இந்த வழக்கில் தவறிய தொடர்புகள் இல்லாதிருக்க வேண்டும் என்ற போதிலும், சொல்லப்பட்ட சாட்சியங்களின் மீது, ஒவ்வொரு தொடர்பும் வெளிப்பட வேண்டும் என்பது, அவ்வாறான சில தொடர்புகளை நிரூபிக்கப்பட்ட பொருண்மைகளிலிருந்து ஊகிக்கலாம் என்பதாகும். இந்த ஊகங்களை எடுக்க, பொதுவான இயற்கையான நிகழ்வுகள் குறித்தும் மற்றும் மனித நடத்தை மற்றும் அந்த குறிப்பிட்ட வழக்கின் சங்கதிகள் குறித்த அவற்றின் தொடர்பினையும் கட்டாயம் நீதிமன்றம் கருதவேண்டும். பின்னர் நிரூபிக்கப்பட்ட பொருண்மைகளின் விளைவை நீதிமன்றம் பரிசீலிக்க வேண்டும்.

24. குற்றம்சாட்டப்படுவதற்கு சூழ்நிலை சான்றுகள் போதுமானது என்பதை தீர்மானிக்கும்போது நீதிமன்றம், குற்றத்தின் முடிவை உறுதிசெய்கின்ற நிரூபிக்கப்பட்ட அனைத்து சங்கதிகளின் ஒட்டுமொத்த விளைவையும் கருத்தில்கொள்ள வேண்டும். அவ்வனைத்து சங்கதிகளின் ஒட்டுமொத்த விளைவையும் குற்றம் சாட்டப்பட்டவரின் குற்றத்தை நிரூபிப்பதற்கு, உறுதியானதாக இருந்தால் அந்த சங்கதிகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவையை தனியாகவோ அல்லது தாமகவோ முடிவு செய்ய இயலாததாய் இருந்தபோதிலும் குற்றச்சாட்டு நியாயப்படுத்தப்படும். நிறுவப்பட்ட பொருண்மையை குற்றம் சாட்டப்பட்டவரின் குற்றத்தன்மையின் அனுமானத்தோடு ஒத்துப்போக வேண்டும் மற்றும் நிரூபிக்கப்பட வேண்டிய ஒன்றைத்தவிர பிற அனுமானத்தை விலக்க வேண்டும். ஆனால், சூழ்நிலை சான்றின் அடிப்படையில் உள்ள வழக்கில், அரசு வெற்றியடைவதற்கு முன், குற்றம் சாட்டப்பட்டவரால் எப்படி இருந்தாலும் எல்லைமீறுகிற மற்றும் கற்பனையாக கூறப்பட்ட ஒவ்வொரு மற்றும் எல்லா அனுமானங்களையும் விலக்கவேண்டும் என்பது பொருளல்ல. குற்றம் சாட்டப்பட்டவரின் குற்றமற்ற தன்மைக்கு ஒத்துபோகிற முடிவிற்கு எந்த ஒரு நியாயமான காரணத்தையும் விட்டுவிடாதவாறு ஒரு முழுமையான சங்கிலி தொடர் இருத்தல் வேண்டும் மற்றும் எல்லா மனித வாய்ப்புகளில்

அந்த செயல் குற்றம்சாட்டப்பட்டவரால் செய்யப்பட்டிருக்க வேண்டும் என்பதை கட்டாயமாக நிறுவ வேண்டும். எங்கு சங்கிலியில் பல்வேறு தொடர்புகள் அதாகவே முழுமையாகும்போது தவறான கோரிக்கை அல்லது தவறான வாதம் நீதிமன்றத்திற்கு உத்தரவாதம் தறுவதற்கு மட்டுமே அழைக்கப்பட வேண்டும்.

7.4. இதே கருத்து இந்த நீதிமன்றத்தில் பிந்தைய தீர்முடிவான மேற்கண்ட முகமது யூனுஸ் அலிதராப்தார் மற்றும் மேற்கண்ட அன்வர் அலி மற்றும் ஒருவர் என்ற வழக்கிலும் எடுக்கப்பட்டுள்ளது.

7.5. இந்நீதிமன்றத்தால் வகுத்துரைக்கப்பட்ட மேற்சொன்ன தீர்முடிவுகளை தற்போதைய வழக்கின் சங்கதிகளுடன் பொருத்தினால், இந்த வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகள் இ.த.ச. பிரிவு 302/34–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றத்திற்கு குற்றம் சாட்டப்பட்டவரை உயர்நீதிமன்றம் மற்றும் விசாரணை நீதிமன்றம் தண்டித்தல் நியாயப்படுத்தப்பட்டுள்ளதா என்பதை பரிசீலிக்க வேண்டும்.

7.6. முக்கிய சாட்சியான மற்றும் அவரது சாட்சியத்தை வைத்து மேல்முறையிட்டாளர்கள் – குற்றம் சாட்டப்பட்டவர் இ.த.ச. பிரிவு 302/34–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளாரா என அ.ச.6 – சான்றுரையைக் கருத்தில் கொண்டால் குற்றம் சாட்டப்பட்டவர் இறந்தவருடன் கடைசியாக காணப்பட்டார் என அரசுத்தரப்பு நிரூபித்துள்ளது எனக்கூற முடியாது. சில சண்டைக்குப் பிறகு, பாட்டி இறந்து போனவரைத் தூங்குவதற்காக அறைக்கு அழைத்துச்சென்றார் என அ.சா.6 தனது முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ளார்.

அதன்பின்னர் அவளும்கூட தூங்கப்போய்விட்டார் மற்றும் அவள் காலையில் எழுந்தவுடன், அவளது பாப்பா மரத்தில் தொங்கிக்கொண்டிருந்ததை அவள் கண்டாள். குறுக்கு விசாரணையில், அவளது தந்தையை எவரும் அடித்து அவள் பார்க்கவில்லை என அவள் குறிப்பிட்டுக் கூறினாள். எனவே குற்றம் சாட்டப்பட்டவர் இறந்தவருடன் கடைசியாகக் காணப்பட்டார் என்பதற்கான எந்த சான்றும் இல்லை. இறந்தவர் படுக்க அறைக்கு சென்றபிறகு என்ன நடந்தது என்பதற்கு எந்த சாட்சியமும் இல்லை.

7.7. இந்தச் சூழ்நிலையில், மேல்முறையிட்டாளர் குற்றம் சாட்டப்பட்டவர் மட்டுமே கொலை செய்தார் மற்றும்/அல்லது இறந்தவரைக் கொன்றார் என்ற முடிவுக்கு வழிவகுக்கும். குற்றம் மற்றும் நிகழ்வுகளின் முழுமையான சங்கிலித் தொடர் குறித்து அரசுதரப்பு நிரூபிக்கத்தவறி விட்டது. இந்த சூழ்நிலைகளின் கீழ் மற்றும் சூழ்நிலைச்சான்று குறித்து மேற்சொன்ன முடிவுகளில் கூறப்பட்ட சட்டங்களைப் பொருத்திப் பார்த்தால், அத்தகைய சூழ்நிலைச் சான்றின் அடிப்படையில் இ.த.சா. பிரிவு 302/34–ன் கீழுள்ள குற்றத்திற்காக மேல்முறையிட்டாளர் – குற்றம் சாட்டப்பட்டவருக்கு குற்றத்தண்டணை வழங்கி விசாரணை நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றமும் மிகப் பெரும் பிழைப் புரிந்துள்ளது என நாங்கள் கருதுகிறோம். இ.த.ச. பிரிவு 302/34–ன் கீழ் உள்ள குற்றத்திற்கு மேல்முறையீட்டாளர் குற்றம்சாட்டப்பட்டவரின் தண்டனைத் தீர்ப்பு நிலைநிறுத்தத்தக்கதல்ல.

8. மேலே சொன்னவாறு மற்றும் மேலே கூறிய காரணங்களால் இரு மேல்முறையீடுகளும் வெற்றியடைகிறது. இ.த.ச. பிரிவு 302/34–ன்

கீழ் தண்டிக்கப்படக்கூடிய குற்றத்திற்காக மேல்முறையீட்டாளர் – அசல் குற்றம் சாட்டப்பட்டவருக்கு குற்றத்தண்டனை வழங்கி விசாரணை நீதிமன்றம் அதேபோல் உயர்நீதிமன்றம் வெளியிட்ட தீர்ப்புரை மற்றும் ஆணை செல்லாததாகவும் மற்றும் நீக்கரவும் செய்யப்படுகிறது மற்றும் அவர்கள் எந்தக் குற்றத்திற்காக தண்டிக்கப்பட்டார்களோ அதிலிருந்து குற்றம் சாட்டப்பட்டவர்கள் விடுவிக்கப்படுகிறார்கள். வேலு வழக்கில் தேவைப்படவில்லையெனில், மேல்முறையீட்டாளர்கள் – குற்றம்சாட்டப்பட்டவர் விடுவிக்கப்படுகிறார்.

தற்போதைய மேல்முறையீடுகள் அதன்படி அனுமதிக்கப்படுகிறது.

மேல்முறையீடு அனுமதிக்கப்பட்டது.

<u>பொறுப்புத் துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்வதற்கும் உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."